# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2007 / 2008

## HELD IN AUGUST – 2008

## COM 21 – ADVANCED FINANCIAL ACCOUNTING

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

01. A நிறுவனத்தினதும் B நிறுவனத்தினதும் சுருக்கிய ஐந்தொகைகள் பின்வருமாறு.

31, மார்ச் 2007 இல் உள்ளபடி ஐந்தொகை

| பங்கு முதல், பொறுப்புக்கள்: | A | B |
|---|---|---|
| சாதாரண பங்குகள் | 600,000 | 400,000 |
| 6 % முன்னுரிமைப் பங்குகள் | --- | 100,000 |
| பொது ஒதுக்கம் | 160,000 | 80,000 |
| இலாப நட்டக் கணக்கு | 20,000 | 25,000 |
| சென்மதி உண்டியல் | 130,000 | 120,000 |
| கடன் கொடுனர் | 230,000 | 285,000 |
| பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம் | 60,000 | 40,000 |
| | 1200,000 | 1050,000 |

| சொத்துக்கள்: | | |
|---|---|---|
| நன்மதிப்பு | -- | 20,000 |
| நிலையான சொத்துக்கள் | 350,000 | 250,000 |
| முதலீடு | 360,000 | 90,000 |
| இருப்பு | 220,000 | 360,000 |
| கடன்பட்டோர் | 210,000 | 250,000 |
| வருமதி உண்டியல் | 40,000 | 35,000 |
| காசு | 20,000 | 45,000 |
| | 1200,000 | 1050,000 |

A நிறுவனம் B நிறுவனத்தின் சாதாரண பங்குகளில் ¾ பங்கினை, 1 ஏப்ரல் 2006 இல் 20% வட்டத்துடன் கொள்வனவு செய்து 31,மார்ச் 2007 இல் உள்ளபடியான A நிறுவனத்தின் புத்தகத்தில் திரட்டிய ஐந்தொகையினைத் தயாரிக்குக. கீழ்வரும் மேலதிக தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன:

(i) 31 மார்ச் 2006 இல் முடிவுற்ற ஆண்டில் கீழ் கொண்டுவரப்பட்ட இலாப நட்டக் கணக்கு மீதி 20,000/- ஆகும்.

(ii) A நிறுவனத்தின் கடன்கொடுத்தோர் தொகையானது B நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்த பொருட்கள் 12,000/- வை உள்ளடக்கியுள்ளது. இப்பொருட்கள் இன்னும் விற்பனை செய்யப்படவில்லை. B நிறுவனம் பொருட்களை கிரயத்துடன் 20% இலாபம் வைத்து விற்பனை செய்கிறது.

(iii) A நிறுவனத்தினதும் B நிறுவனத்தினதும் இயக்குனர்கள் சாதாரண பங்குதாரர்களுக்கு 10% பங்கிலாபத்தை 31, மார்ச் 2007 இல் பிரேரித்துள்ளனர்.

(iv) A நிறுவனத்தின் வருமதி உண்டியல் 20,000/- B நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும்.

(25 புள்ளிகள்)

02. A நிறுவனமும் B நிறுவனமும் 1 ஏப்ரல் 2007 இல் ஒன்றிணைந்தன. புதிய கம்பனி C நிறுவனம் பழைய கம்பனிகளினுடைய வியாபாரத்தை எடுத்து நடத்துவதற்காக உருவாக்கப்பட்டது. 31 மார்ச் 2007 இல் A நிறுவனத்தினதும், B நிறுவனத்தினதும் ஐந்தொகைகள் பின்வருமாறு.

| பங்கு முதல், பொறுப்புக்கள் | A | B |
|---|---|---|
| **பங்கு முதல்:** | | |
| ஒவ்வொன்றும் 100/- வான சாதாரண பங்குகள் | 800 | 750 |
| ஒவ்வொன்றும் 100/- வான 12% முன்னுரிமைப் பங்குகள் | 300 | 200 |
| **ஒதுக்கங்கள்:** | | |
| மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | 150 | 100 |
| பொது ஒதுக்கம் | 170 | 150 |
| இலாப நட்டக்கணக்கு | 100 | 80 |
| **அடமானமுள்ள கடன்கள்:** | | |
| ஒவ்வொன்றும் 100/- வான 10% தொகுதிக் கடன்கள் | 60 | 30 |
| **நடைமுறைப்பொறுப்புக்கள்:** | | |
| வியாபாரக் க.கொடுத்தோர் | 270 | 120 |
| சென்மதி உண்டியல் | 150 | 70 |
| | 2000 | 1500 |

| சொத்துக்கள் : | A | B |
|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்:** | | |
| காணி கட்டிடம் | 550 | 400 |
| இயந்திரமும், உபகரணமும் | 350 | 250 |
| முதலீடு | 150 | 50 |
| **நடைமுறைச் சொத்து:** | | |
| இருப்பு | 350 | 250 |
| கடன்பட்டோர் | 250 | 300 |
| வருமதி உண்டியல் | 50 | 50 |
| காசும் வங்கியும் | 300 | 200 |
| | 2000 | 1500 |

**மேலதிக தகவல்கள் :**

(அ) A நிறுவனத்தினதும், B நிறுவனத்தினதும் 10% தொகுதிக் கடன்களை C நிறுவனம் இல்லாமல் செய்வதற்காக C நிறுவனத்தில் ஒவ்வொன்றும் 100/- வான 15% தொகுதிக் கடன்கள் ஏற்கனவே A, B யினால் செலுத்தப்பட்ட வட்டிக்கு சமமான தொகையினை பேணக்கூடிய வகையில் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டன.

(ஆ) இரண்டு கம்பனியினதும் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கும் சம எண்ணிக்கையான 15% முன்னுரிமைப் பங்குகள் 150/- விலையில் (முகவிலை 100/-) C நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

(இ) C நிறுவனம் A நிறுவத்தின் ஒவ்வொரு சாதாரண பங்கிற்கும் 5 சாதாரண பங்குகளும், B நிறுவனத்தின் ஒவ்வொரு சாதாரண பங்கிற்கும் 4 சாதாரண பங்குகளும் வழங்கும். ஒவ்வொன்றும் 10/- முகவிலையுள்ள பங்குகள் 30/- படி வழங்கப்படும்.

A , B நிறுவனம் ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் C நிறுவனத்தின் ஐந்தொகையினை 01.04.2007 இல் உள்ளபடி தயாரிக்க.

(15 புள்ளிகள்)

03. ஐயா நிறுவனத்தின் 31 மார்ச் 2007 இல் உள்ளபடியான ஐந்தொகை பின்வருமாறு

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **நிலையான சொத்துக்கள் :** | | |
| காணி, கட்டிடம் | | 300,000 |
| இயந்திரமும் உபகரணமும் | | 600,000 |
| வியாபாரக் குறி | | 80,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| இருப்பு | 210,000 | |
| கடன் பட்டோர் | 320,000 | |
| வங்கியிலுள்ள காசு | 251,000 | |
| இலாப நட்டக் கணக்கு | 267,000 | |
| | 1048,000 | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் :** | | |
| சில்லறை கடன் கொடுத்தோர் | 390,000 | |
| செலுத்த வேண்டிய வட்டி | 38,000 | |
| | 428,000 | 620,000 |
| **அடமானமுள்ள கடன்கள் :** | | |
| 14% தொகுதிக்கடன் எல்லா சொத்துக்களின் மீதும் அடமானம் வைக்கப்பட்டுள்ளது | | (300,000) |
| | | 1300,000 |
| **பங்கு மூலதனம் :** | | |
| ஒவ்வொன்றும் 100/- வான 5000 14% முன்னுரிமைப் பங்குகள் | | 500,000 |
| ஒவ்வொன்றும் 100/- வான ரூபா 75 செலுத்தப்பட்ட 3000 ச.பங்குகள் | | 225,000 |
| ஒவ்வொன்றும் 100/- வான ரூபா 50 செலுத்தப்பட்ட 11500 ச.பங்குகள் | | 575,000 |
| | | 1300,000 |

31, மார்ச் 2007 இல் கம்பனியானது கலைக்கப்பட்டது.

**மேலதிக தகவல்கள்:**

(அ) இரண்டு வருடங்களாக முன்னுரிமைப் பங்கிலாபம் நிலுவையாக உள்ளது. இந்நிலுவையானது கலைப்பின் போது தன்னிச்சையாக செலுத்தப்படும். காணி கட்டிடங்கள் மீது பிணை செய்யப்பட்ட ரூபா 100,000 பெறுமதியான கடன், கடன்கொடுத்தோரிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஆ) சொத்துக்கள் பின்வருமாறு தேறின.

| | ரூபா. |
|---|---|
| காணி கட்டிடம் | 340,000 |
| இயந்திரமும் உபகரணமும் | 500,000 |
| வியாபாரக் குறி | 60,000 |
| இருப்பு | 220,000 |
| கடன்பட்டோர் | 260,000 |

(இ) கலைப்புச் செலவு ரூபா. 31,8000 ஆகும்.

(ஈ) கலைப்பாளர் காசு தவிர்ந்த ஏனைய எல்லா சொத்துக்களினதும் தேறிய பெறுமதியில் 3% மும், அடமானம் அல்லா கடன்காரர்களுக்கு செலுத்தப்படும் தொகையில் 2% மும் தரகிற்கு உரித்துடயவர் ஆவர். முன்னுரிமைக் கடன்காறர்களின் தொகை 25,000/- வாகும்.

(உ) எல்லா கொடுப்பனவுகளும் 30 ஜுன் 2007 இல் மேற்கொள்ளப்பட்டன.

கலைப்பாளரின் இறுதிக் கணக்கினை தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

04. குட்லக் நிறுவனம் உற்பத்தி வியாபாரத்தினை மேற்கொள்கிறது. இந்நிறுவனம் அதனுடைய பொருட்களின் சிலவற்றை கடல் கடந்த கிளை ஒன்றிற்கு ஏற்றுமதி செய்கிறது. இக்கிளையின் நாணய அலகு திர் ஹம் ஆகும். கிளையானது பொருட்களை விற்பனை செய்வதற்கு முன்னர் இறுதி செயற்பாட்டு ஒன்று படுத்தலினை மேற்கொள்கிறது. தலைமை அலுவலகத்தினதும் கிளையினதும் 30 ஜுன் 2007 இல் உள்ளபடியான பரீட்சை மீதி பின்வருமாறு.

| விபரம் | தலைமை அலுவலகம் | | கிளை | |
|---|---|---|---|---|
| | வரவு. ரூபா. | செலவு. ரூபா. | வரவு. திர்ஹம் | செலவு. திர்ஹம் |
| கட்டிடம் கிரயத்தில் | 14,000 | | 63,000 | |
| கடன்பட்டோர்/கடன் கொடுத்தோர் | 8,900 | 9,500 | 36,000 | 1,560 |
| விற்பனை | | 104,000 | | 432,000 |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | | 40,000 | | |
| கிளைக்கு அனுப்பிய உதிரிப்பாகம் | | 35,000 | | |
| தலைமை அலுவலகம் / கிளை | 60,100 | | | 504,260 |
| கிளையின் விற்ற சரக்கின் கிரயம் | | | 360,000 | |
| இயந்திரத்தின் மீதான தேய்வு ஏற்பாடு | | 1,500 | | 56,700 |
| தலைமை அலுவலகத்தின் விற்ற சரக்கின் கிரயம் (கிளைக்கு அனுப்பிய பொருட்கள் உட்பட) | 59,000 | | | |
| நிருவாக கிரயம் | 15,200 | | 18,000 | |
| இருப்பு 30, ஜுன் 2007 | 28,900 | | 11,520 | |
| இலாப நட்டக் கணக்கு | | 2,000 | | |
| இயந்திரம் கிரயத்தில் | 6,000 | | 126,000 | |
| பண அனுப்பல் | | 28,000 | 272,000 | |
| வங்கியிலுள்ள காசு | 4,600 | | 79,200 | |
| விற்பனை வினியோகச் செலவு | 23,300 | | 28,800 | |
| | 220,000 | 220,000 | 994,520 | 994,520 |

கீழ்வரும் செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்:

(அ) இயந்திரத்தின் கிரயத்தின் மீது வருடத்திற்கு 10% தேய்வு செய்யப்பட்ட தொகை விற்ற சரக்கின் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஆ) கிளையின் இருப்பின் மீது ரூபா 300 தேறா இலாப ஒதுக்கம் ஏற்பாடு செய்க

(இ) 26, ஜுன் 2007 இல் கிளை 16,000 திர்ஹம் பணம் அனுப்பியது. இத்தொகையானது தலைமை காரியாலயத்தினால் 14 ஜுன் 2007 இல் பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, இது ரூபா 1990 ஆக தேறியது.

(ஈ) 2005 மே காலப்பகுதியில் கிளையின் வாடிக்கையாளர் ஒருவர் தவறுதலாக கிளையினால் வழங்கப்பட்ட பொருட்களுக்கான பணத்தினை நேரடியாக தலைமை அலுவலகத்தில் செலுத்தி விட்டார். அவர் செலுத்த வேண்டியிருந்த தொகை 320 திர்ஹம் ஆகும். இது 36 ரூபாவாக தேறியது. இது தலைமை அலுவலகத்தினால் சரியாக பேணப்பட்ட போதும் கிளையின் புத்தகங்களில் இதுவரைக்கும் பதியப்படவில்லை.

(உ) தரகு கழிக்கப்பட்ட பின்னரான கிளையின் தேறிய இலாபத்தில் 5% தரகு கிளை முகாமையாளருக்கு செலுத்தப்பட வேண்டும்.

(ஊ) நாணய மாற்று வீதம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| (i) | 01 ஜுலை 2006 | 10 திர்ஹம் = 1 ரூபாய் |
| (ii) | 30 ஜுலை 2007 | 08 திர்ஹம் = 1 ரூபாய் |
| (iii) | வருடத்திற்கான சராசரி | 09 திர்ஹம் = 1 ரூபாய் |
| (iv) | கட்டிடம், இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி | 07 திர்ஹம் = 1 ரூபாய் |

**நீங்கள் தயாரிக்க வேண்டியது :**

* மேற்கூறப்பட்ட செம்மையாக்கலின் பின்னர் தலைமை அலுவலகத்தின் நாணயத்தில் கிளையின் பரீட்சை மீதி

* 30 ஜுன் 2007 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தலைமை அலுவலதக்தினதும், கிளையினதும் நிரல் வடிவிலான வியாபார இலாப நட்டக் கணக்கு.

* 30 ஜுன் 2007 இல் உள்ளபடியான தலைமை அலுவலகத்தினதும், கிளையினதும் திரட்டிய ஐந்தொகை.

(35 புள்ளிகள்)

05. வேறுபடுத்துக.

(அ) கடன் விற்பனையில் இருந்து வாடகை கொள்வனவு உடன்படிக்கை

(ஆ) பொறிப்பிலிருந்து வியாபாரப் பொறுப்பு

(10 புள்ளிகள்)

*****